**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.148/20**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வகணேஷ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | கூலி |
| கிராமம் | கெப்புரங்கன்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.02.24

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

கடந்த 29.10.19 அன்று 1 மணியளவில் கெப்புரங்கன்பட்டி ஈஸ்வரன் கோவில் ஆற்றில் குளிக்க சென்றபோது பாட்டி நொச்சி இலை கொண்டு வர சொன்னார். செல்லம் கோவில் பூசாரி என்னை அருகில் வா என்று அழைத்தார். அவர் கையில் வைத்திருந்த அருவாளால் எனது கட்டைவிரலை வெட்டிவிட்டார். கோத்தா, கொம்மா என்று தகாத வார்த்தையால் பேசினார். அருகில் இருந்த தெய்வம் என்பவர் எங்களை விலக்கிவிட்டார். நான் வீட்டிற்கு சென்றவுடன் என் அம்மா ராசாத்தி, என் அண்ணன் வடிவேல் ஆகியோரிடம் நடந்த விபரத்தை கூறினேன். அதன்பிறகு இருசக்கரவாகனத்தில் க.விலக்குமருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அங்கு போலிசார் வந்து என்னை விசாரித்தார். நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என் வலது கை விரலில் அடிப்பட்டடிருந்ததால் நான் இடது பெருவில் கைரேகை வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி செல்லம் கோவில் பூசாரி என்றால் சரிதான். எத்தனை வருடமாக பூசாரியாக இருக்கிறார் என்றால் அவர் பூசாரி கிடையாது. நொச்சி இலை வேண்டும் என்று கேட்டவர் பெயர் தெரியாது. அவர் கோடாங்கிபட்டியை சேர்ந்தவர். மேற்படி விபரத்தை நான் போலிச்விசாரணையில் கூறியுள்ளேன். அன்றையதினம் நான் தெய்வம், நாகபாண்டி, அருள்பாண்டி ஆகிய நான்கு பேர் குளிக்க சென்றோம். அந்த இடத்தில் நான்கு பேரும் ஒன்றாக தான் இருந்தோம் என்றால் சரிதா்ன. அவர்கள் குளித்து கொண்டிருந்தார்கள். நாகபாண்டி, அருள்பாண்டியை போலிசார் விசாரிக்கவில்லை. நாகபாண்டி, அருள்பாண்டி அங்கு இருந்ததை நான் போலிச் விசாரணையில் கூறவில்லை. என்னை தவிர அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள். அவர்களை எனக்குஅடையாளம் தெரியாது. அடையாளம் தெரியாத பல நபர்கள் இருந்ததை போலிச்விசாரணையில் கூறியுள்ளேன். கோவிலில் நிறையபேர்கள் இருந்தார்கள். நாகபாண்டி, அருள்பாண்டி எனக்கு மாமா மச்சினன் உறவுமுறை . தெய்வம் என்பவர் எனக்கு மாமா உறவுமுறைவேண்டும். நாங்கள் குளிக்க செல்லும் போது மதியம் 1 மணி இருக்கும். கோவிலுக்கும் என் வீட்டிற்கும் இடையில் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் குளித்த முடித்தபின்பு தான் பிரச்சனை நடந்ததா என்றால் குளிப்பதற்குமுன்பே நடந்தது. அங்கு பெண்கள்நிறைய பேர் குளித்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் பெண்கள் பக்கம் குளிக்க போனதால் தான் கோவில் பூசாரி என்னை சத்தம் போட்டார் என்றால் சரியல்ல. நொச்சி மரம் ஆற்றங்கரையில் எத்தனை மரங்கள் உள்ளது என்றால் 2 மரங்கள் உள்ளது. என் வீட்டில் இருந்து போகும் வழியில் தான் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். நான் போகும் போது பிசிபட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நேரடியாக மருத்துவமனை சென்றேன். நான்புகார் கொடுக்கும் போது மணி எத்தனை இருக்கும் என்றால் மயக்கநிலையில் இருந்ததால் எனக்கு நேரம் தெரியவில்லை. போலிசார் எப்போது என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நேரம் மட்டும் தான் தெரியவில்லை. நான் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் நான் கையெழுத்து போடும்நிலையில் இருந்தேன் என்றால் போலிசாரே எனது இடது கைரேகையை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனை சென்று அரைமணி

நேரதத்தில் போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். செல்லம் என்பவருடன்வேறு யார் இருந்தார்கள் என்றால் அவருடன் வேலை பார்க்கும் ஒரு நபர் இருந்தார். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் நான் கூறவில்லை. எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும் தகாத வார்த்தையால் பேசவில்லை என்றால் சரியல்ல. நான் பெண்கள் குளிப்பதை எட்டி பார்ப்பதற்காக மரத்தில் ஏறி கிழே விழுந்ததில் மேற்படி காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மீது தவறு இருந்ததால் தான் நாகபாண்டி, அருள்பாண்டி என்னுடன் இருந்ததை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. அவர்களை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் நாகபாண்டி, அருள்பாண்டி என்னுடன் இருந்ததை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது உள்ள தவறை மறைப்பதற்காக எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதற்கேற்ப பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.